
# கிறிஸ்தவ வளர்ச்சிக்கான ஆலோசனைகள்.

By Dr. Otto J. de laTorre



ஆண்டவர் இயேசு கிறிஸ்து உம் வாழ்க்கைக்கு நன்மையானவைகளையே விரும்புகிறார். ஆண்டவரின் வழிகளில் நீர்வளர்ந்து முன்னேறவும், ஒவ்வொரு நாளும் அவரை நன்றாய் அறிந்து கொள்ளவும், உம் வாழ்க்கையில் அவரது சித்தத்தைத் தெரிந்து கொள்ளவும் வேண்டுமென்று அவர் விரும்புகிறார். கிறிஸ்தவ வாழ்க்கையில் நீர் வளருவதெற்கென்று சில ஆலோசனைகளை இங்கே கொடுத்திருக்கிறோம்.

*1.* **ஒவ்வொரு நாளும் வேதாகமத்தை வாசிக்க வேண்டும்:** வேதம் தேவனுடைய வார்த்தையாகும் . தேவ வார்த்தையினாலேயே கிறிஸ்தவர்களாகிய நாம் போஷிக்கப்

படுகிறோம். நமது வாழ்க்கைக்கைக்கான தேவனுடைய சித்தத்தையும், நமதாண்டவரைப்பற்றிய போதனையையும் வேதத்தில்தான் நாம் காண முடியும்.

**வேதம் சொல்லுகிறது :** *''வேத வாக்கியங்களெல்லாம் தேவ ஆவியினால் அருளப்பட்டிருக்கிறது : தேவனுடைய மனுஷன் தேறினவனாகவும், எந்த நற்கிரியையும் செய்யத் தகுதியுள்ளவனாகவும் இருக்கும்படியாக, அவைகள் உபதேசத்துக்கும், கடிந்து கொள்ளுதலுக்கும், சீர்திருத்தலுக்கும், நீதியைப் படிப்பிப்பதலுக்கும் பிரயோஜன முள்ளவைகளா யிருக்கிறது'' (2 தீமோத்தேயு 3:16,17)*

## 2. ஒவ்வொரு நாளும் ஜெபிக்க வேண்டும் .

ஜெபம் என்பது தேவனோடு பேசுவதாகும் அல்லது உரையாடுதலாகும். நாம் எவ்விடத்திலும் ஜெபிக்கவும் நாம் நேரத்தை ஒதுக்கவேண்டும். தேவன் நம்மோடு உரையாடுவதற்கும் இடம் கொடுக்க வேண்டும். ஜெபிக்கும்போது, பாவங்களை அறிக்கையிடுதலும், அவர் செய்த நன்மைகளுக்காய்த் துதிப்பதும், அவர் தேவனாய் இருப்பதால் அவரைத் தொழுது கொள்வதும் அவசியம்.

**வேதம் சொல்லுகிறது:** *'இடைவிடாமல்ஜெபம் பண்ணுங்கள்.'*
*(1 தெசலோனிக்கேயர் 5:17)*

## 3. தேவனுடைய வார்த்தையைப் பிரசங்கிக்கும் சபைக்குச் செல்.

நமதாண்டவர் இயேசு கிறிஸ்து இவ்வுலகில் மாம்சத்தில் வந்த போது, பலமுறை அவர் யுதச் சிற்றாலயங்களுக்கும் எருசலேம் தேவாலயத்திற்கும் சென்று பரம தந்தையாம் தேவனை வழிபட்டார். கிறிஸ்தவர்களாகிய நாமும் அவரைப் பின்பற்றி தேவன் விரும்புகிற வண்ணம் அவரை வழிபடவும், அவருக்கு ஊழியம்

செய்யவும், மற்ற சகோதரரோடு ஐக்கியம் கொள்ளவும் தக்கதாக நல்லதொரு சபையிலே அங்கமாக வேண்டும். தேவனுடையவார்த்தைமுழுமையாய்ப்பிரசங்கிக்கப்பட்டும், விசுவாசிக்கப்பட்டும் இருக்கிற சபையிலே சேர வேண்டும்.

**வேதம் சொல்லுகிறது :** *''சபை கூடி வருதலைச் சிலர் விட்டு விடுகிறது போல நாமும் விட்டுவிடாமல் ஒருவருக்கொருவர் புத்தி சொல்லக்கடவோம்; நாளானது சமீபித்து வருகிறதை எவ்வளவாய்ப் பார்க்கிறீர்களோ அவ்வளவாய்ப் புத்திசொல்ல வேண்டும்.''(எபிரேயர் 10:25)*

### 4. உன் பாவங்களைத் தேவனிடத்தில் அறிக்கையிடு.

நாம் தேவனுக்கு விரோதமாகவும், நம் அயலாருக்கு விரோதமாகவும் பாவம் செய்கிற பொழுது, உடனே தேவனிடத்தில் நம் பாவங்களை அறிக்கையிட்டு, அயலாரோடும் ஒப்புரவாக வேண்டும். நாம் தேவனிடத்தில் நம் பாவங்களை அறிக்கையிடும் போது, நாம் செய்த தவறுகளை தேவனிடத்தில் ஒத்துக்கொண்டு, அப் பாவவங்களை விட்டு விடவும் செய்கிறோம். நாம் நமது பாவங்களை அறிக்கையிட்டால் அவர் தமது இரத்தத்தினாலே நம்மைக் கழுவி நம்மை மன்னிக்கவும் செய்கிறார்.

**வேதம் நமக்குச் சொல்லுகிறது ;** *''நம்முடைய பாவங்களை நாம் அறிக்கையிட்டால் , பாவங்களை நமக்கு மன்னித்து எல்லா அநியாயத்தையும் நீக்கி நம்மைச் சுத்திகரிப்பதற்கு அவர் உண்மையும் நீதியும் உள்ளவராயிருக்கிறார்.'' (1 யோவான் 1:9)*

### 5. வார்த்தையினாலும் செய்கையினாலும் மற்றவர்களுக்குச் சாட்சியாயிரு.

நம்முடைய வாழ்க்கையினாலும் வார்த்தைகளாலும் கிறிஸ்துவுக்கு நற்சாட்சிகளாயிருக்க வேண்டும். கிறிஸ்துவை அறியாத மக்களுடைய கண்கள், நாம் அறிக்கை

செய்வதை நாமேகடைப்பிடிக்கிறேமா என்றுஅறிய நம்மேல் நோக்கமாயிருக்கின்றன என்பதை நாம் நினைவிலே கொள்ள வேண்டும் .

**வேதம் சொல்லுகிறது :** *''என் பின்னே வாருங்கள், உங்களை மனுஷரைப் பிடிக்கிறவர்களாக்குவேன் என்றார்.'' (மத்தேயு 4:19)*

**6. எல்லாவற்றிலேயும் தேவனுக்குக் கீழ்ப்படி**

நாம் உண்மையாகவே கிறிஸ்துவை நேசிப்போமேயானால் நமக்கு அவர் சொல்லுகிறபடி நடப்போம். மறுபடியும் பிறந்தவனாய், எல்லாவற்றிலேயும் கிறிஸ்துவைப் பின் பற்றுகிறவனே கிறிஸ்தவன் ஆவான். நம்முடைய வாழ்க்கைக்கு எது நலமானது என்று அவர் காண்கிறாரோ அதையே நாம் செய்யும்படி தேவன் சொல்லுகிறார்.

**வேதம்சொல்லுகிறது:**

*''அவருடையகற்பனைகளைநாம்கைக்கொள்ளுகிறவர்களானால், அவரை அறிந்திருக்கிறோமென்பதை அதினால் அறிவோம்.'' (1 யோவான் 2:3)*

**7. உபவாச விஷயத்தில் ஆண்டவரைப் பின்பற்று.** தேவனுடைய மக்கள் அவருக்குக் கீழ்ப்படிந்தவர்களாய் எப்படி உபவாசித்தார்கள் என்பதை வேதத்தில் அதிகமாகக் காணலாம். ஆண்டவர் இயேசு கிறிஸ்துவும், தாம் பரமேறினபின்பும் தம்முடைய பிரசன்னத்தை நாடி ஜக்கியம் கொள்ளும்படி தமது சீஷர்கள் உபவாசம் இருக்க வேண்டுமென்று கூறினார்.

**வேதம் நமக்குச் சொல்லுகிறது :**

*''அதற்கு இயேசு: மணவாளன் தங்களோடிருக்கையில் மணவாளனுடைய தோழர் துயரப்படுவார்களா? மணவாாளன் அவர்களை விட்டு எடுபடும் நாட்கள் வரும், அப்பொழுது உபவாசிப்பார்கள்'' (மத்தேயு 9:15)*

மேலே கண்ட ஆலோசனைகளை நீங்கள் கைக்கொண்டால் சீக்கிரமே ஆண்டவர் இயேசுகிறிஸ்துவின் மெய்ச் சீடராக வளர ஆரம்பித்து விடுவீர்கள்.

# கர்த்தரே தேவன்

## 1. தேவன் மூன்று ஆள் தத்துவங்களாய் இருக்கிறார்.

''பின்பு தேவன் : நமது சாயலாகவும் நமது ரூபத்தின் படியேயும் மனுஷனை உண்டாக்குவோமாக..'' (ஆதியாகமம் 1:26)

''நான் இனி உலகத்திலிரேன், இவர்கள் உலகத்திலிருக்கிறார்கள்; நான் உம்மிடத்திற்கு வருகிறேன். பரிசுத்த பிதாவே, நீர் எனக்குத் தந்தவர்கள் நம்மைப்போல ஒன்றாயிருக்கும்படிக்கு,நீர்அவர்களைஉம்முடையநாமத்தினாலே காத்துக்கொள்ளும்.'' (யோவான் 17:11)

## 2. தேவன் : பிதா, குமாரன், பரிசுத்த ஆவியானவர்.

''நீங்கள் புறப்பட்டுப் போய்; சகல ஜாதிகளையும் சீஷராக்கி, பிதா குமாரன் பரிசுத்த ஆவியின் நாமத்திலே அவர்களுக்கு ஞானஸ்நானம் கொடுத்து....'' (மத்தேயு 28:19)

''கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் கிருபையும், தேவனுடைய அன்பும், பரிசுத்த ஆவியினுடைய ஐக்கியமும், உங்கள் அனைவரோடுங்கூட இருப்பதாக.'' (2 கொரிந்தியர் 13:14)

## 3. தேவனுடைய சில குணாதிசயங்கள்.

''ஆபிரகாம் தொண்ணூற்றொன்பது வயதானபோது , கர்த்தர் ஆபிரகாமுக்குத் தரிசனமாகி: நான் சர்வ வல்லமையுள்ள தேவன் நீ எனக்கு முன்பாக நடந்து கொண்டு உத்தமனாயிரு'' (ஆதியாகமம் 17:1)

''பொறுமையையும் ஆறுதலையும் அளிக்கும் தேவன் , கிறிஸ்து இயேசுவினுடைய மாதிரியின் படியே நீங்கள் ஏக சிந்தையுள்ளவர்களாய் இருக்கும்படி உங்களுக்குஅநுக்கிரகம் செய்வாராக'' (ரோமர் 15:6)

''என் தேவன் தம்முடைய ஐசுவரியத்தின்படி உங்கள் குறைவையெல்லாம் கிறிஸ்து இயேசுவுக்குள் மகிமையிலே நிறைவாக்குவார்.'' (பிலிப்பியர் 4:19)

''அன்பில்லாதவன் தேவனை அறியான் :தேவன் அன்பாகவே இருக்கிறார் .'' (1 யோவான் 4:8)

''அவர் (தேவன் ) உன் அக்கிரமங்களை எல்லாம் மன்னித்து, உன் நோய்களையெல்லாம் குணமாக்கி'' (சங்கீதம் 103:3)

## தண்ணீரில் ஞானஸ்நானம்

**1. தண்ணீரில் ஞானஸ்நானம் பெறவேண்டுமென்பது ஆண்டவர் இயேசுகிறிஸ்து சபைக்குக் கொடுத்த கட்டளையாகும்.**

''விசுவாசமுள்ளவனாகி ஞானஸ்நானம் பெற்றவன் இரட்சிக்கப்படுவான்;விசுவாசியாதவனோ ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கபடுவான் .''(மாற்கு 16:16)

**2.தண்ணீரில் ஞானஸ்நானம் பெறுவது நாம் பின்பற்றவேண்டிய ஒரு முன்மாதிரியாகும்.**

ஆண்டவர் இயேசு கிறிஸ்து ஞானஸ்நானம் பெற்றார் .

''இயேசு ஞானஸ்நானம் பெற்று, ஜலத்திலிருந்து கரையேறினவுடனே .......''(மத்தேயு 3:16)

சீஷர்களும் ஞானஸ்நானம் பெற்றார்கள்.

''இயேசு அவர்களை நோக்கி: நான் குடிக்கும் பாத்திரத்தில் நீங்கள் குடிப்பீர்கள், நான் பெறும் ஸ்நானத்தையும் நீங்கள் பெறுவீர்கள் .'' (மாற்கு 10:39)

**3 நீரில் பெறும் ஞானஸ்நானத்தின் அர்த்தம்:**

'மேலும் பிதாவின் மகிமையினாலே கிறிஸ்து மரித்தோரிலிருந்து எழுப்பப்பட்டதுபோல,நாமும்புதிதானஜீவனுள்ளவர்களாய்நடந்து கொள்ளும்படிக்கு, அவருடைய மரணத்திற்குள்ளாக்கும்

ஞானஸ்நானத்திலே கிறிஸ்துவுடனேகூட அடக்கம் பண்ணப்பட்டோம். (ரோமர்6:4)

நீரில்ஞானஸ்நானம்பெறுவதுஇயேசுகிறிஸ்துவுடனேகூட மரிப்பதற்கும் உயிர்த்தெழுவதற்கும் ஒரு அடையாளமாய் இருக்கிறது.

## 4. நீரில் ஞானஸ்நானம் பெறும் முறை:

### ஞானஸ்நானம் என்ற வார்த்தைக்கு அர்த்தம் :

முழுகுதல், நீரில் முற்றிலுமாக அமிழ்ந்து போதல்.

''ஞானஸ்நானத்திலே அவரோடே கூட அடக்கம் பண்ணப்பட்டவர்களாகவும், அதிலே அவரை மரித்தோரிலிருந்தெழுப்பின தேவனுடைய செயலின் மேலுள்ள விசுவாசத்திலே அவரோடே கூட எழுந்தவர்களாகவும் இருக்கிறீர்கள்.'' (கொலோசெயர் 2:12)

''ஆகையால், நீங்கள் புறப்பட்டுப் போய், சகல ஜாதிகளையும் சீஷராக்கி, பிதா குமாரன் பரிசுத்த ஆவியின் நாமத்திலே அவர்களுக்கு ஞானஸ்நானம் கொடுத்து ....''(மத்தேயு 28:19).

## ஆண்டவர் இயேசுகிறிஸ்துவின் ஊழியம்

### 1 இயேசு கிறிஸ்து : தேவன் மனிதனானார் .

### இயேசு கிறிஸ்து தேவன்.

''பிதாக்கள் அவர்களுடையவர்களே; மாம்சத்தின்படி கிறிஸ்துவும் அவர்களில் பிறந்தாரே, இவர் என்றென்றைக்கும் ஸ்தோத்திரிக்கப்பட்ட சர்வத்திற்கும் மேலான தேவன்.'' (ரோமர் 9:5)

### இயேசுகிறிஸ்துவின் மனித இயல்பு.

''கிறிஸ்து இயேசுவிலிருந்த சிந்தையே உங்களிலும் இருக்ககடவது ; அவர் தேவனுடைய ரூபமாயிருந்தும்,

தேவனுக்குச் சமமாயிருப்பதைக் கொள்ளையாடின பொருளாய் எண்ணமல், தம்மைத்தாமே வெறுமையாக்கி, அடிமையின் ரூபமெடுத்து, மனுஷர் சாயலானார் . அவர் மனுஷ ரூபமாய்க் காணப்பட்டு, மரண பரியந்தமும் கீழ்ப்படிந்தவராகி, தம்மைத் தாமே தாழ்த்தினார்.'' (பிலிப்பியர் 2:5-8)

## 2 இயேசு கிறிஸ்துவின் ஊழியம்.

இயேசு கிறிஸ்து, மனிதனைப் பாவத்திலிருந்து இரட்சித்தார். ''தேவன், தம்முடைய ஒரே பேறான குமாரனை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் கெட்டுப்போகாமல் நித்திய ஜீவனை அடையும்படிக்கு, அவரைத் தந்தருளி, இவ்வளவாய் உலகத்தில் அன்பு கூர்ந்தார்.''(யோவான் 3:16)

''அவருடைய கிருபையின் ஐசுவரியத்தின்படியே இவருடைய இரத்தத்தினாலே பாவ மன்னிப்பாகிய மீட்பு இவருக்குள் நமக்கு உண்டாயிருக்கிறது.''(எபேசியர் 1:7)

''இயேசு கிறிஸ்து மனிதனுடைய வியாதிகளைக் குணமாக்கி, பிசாசுகளைத் துரத்துகிறார் . பலவிதமான வியாதிகளினால் உபத்திரவப்பட்டிருந்த அநேகரை அவர் சொஸ்தமாக்கி, அநேகம் பிசாசுகளையும் துரத்திவிட்டார்; அந்தப் பிசாசுகள் தம்மை அறிந்திருந்தபடியால், அவைகள் பேசுகிறதற்கு அவர் இடம்கொடுக்கவில்லை.''(மாற்கு 1:34)

''இயேசுகிறிஸ்து நேற்றும் இன்றும் என்றும் மாறாதவராயிருக்கிறார்.'' (எபிரேயர் 13:8)

இயேசு கிறிஸ்து ஒவ்வொரு கிறிஸ்தவனையும் பூரணப்படுத்துகிறார் .

''தம்முடைய குமாரன் அநேக சகோதரருக்குள்ளே முதற்பேறானவராயிருக்கும்பொருட்டு தேவன் எவர்களை முன்னறிந்தாரோ அவர்களைத்தமது குமாரனுடைய சாயலுக்கு ஒப்பாயிருப்பதற்கு முன்குறித்திருகிறார்.'' (ரோமர் 8:29)

கிறிஸ்தவர்களைத் தம்மோடு சேர்த்துக் கொள்வதற்காக இயேசு கிறிஸ்து திரும்ப வருவார் .

*''என்பிதாவின் வீட்டில் அநேக வாசஸ்தலங்கள் உண்டு; அப்படி இல்லாதிருந்தால், நான் உங்களுக்குச் சொல்லியிருப்பேன்; ஒரு ஸ்தலத்தை உங்களுக்காக ஆயத்தம்பண்ணப்போகிறேன். நான்போய்உங்களுக்காகஸ்தலத்தைஆயத்தம் பண்ணினபின்பு, நான் இருக்கிற இடத்திலே நீங்களும் இருக்கும்படி, நான்மறுபடியும் வந்து உங்களை என்னிடத்தில் சேர்த்துக் கொள்ளுவேன்.'' (யோவான் 14 : 2,3)*

## பரிசுத்த ஆவியானவரின் ஊழியம்.

### 1. பரிசுத்த ஆவியானவரும் தேவனே

*''நீங்கள் தேவனுடைய ஆலயமாயிருக்கிறீர்களென்றும், தேவனுடைய ஆவி உங்களில் வாசமாயிருக்கிறரென்றும் அறியாதிருக்கிறீர்களா?'' (1 கொரிந்தியர் 3:16)*

## பரிசுத்த ஆவியானவர் தேவத்துவமுள்ளவர்.

*''சத்திய ஆவியாகிய அவர் வரும்போது, சகல சத்தியத்திற்குள்ளும் உங்களை நடத்துவார்; அவர் தம்முடைய சுயமாய்ப் பேசாமல், தாம் கேள்விப்பட்டவைகள் யாவையும் சொல்லி, வரப்போகிற காரியங்களை உங்களுக்கு அறிவிப்பார்.'' (யோவான் 16:13)*

## பரிசுத்த ஆவியானவரின் தலையாய ஊழியம்

*''அவர்என்னுடையதில்எடுத்துஉங்களுக்குஅறிவிப்பதினால் என்னை மகிமைப்படுத்துவார்.'' (யோவான் 16:14)*

## பரிசுத்தாவியின் ஞானஸ்நானம்.

இயேசு கிறிஸ்துவே பரிசுத்த ஆவியினால் ஞானஸ்நானம் கொடுப்பவர்.

*''அவர் பரிசுத்த ஆவியினாலும் அக்கினியினாலும் உங்களுக்கு ஞானஸ்நானம் கொடுப்பார்'' (மத்தேயு 3:11)*

**பெந்தேகொஸ்தே திருநாள்:** பரிசுத்தாவியின் அபிஷேகம்

*''அவர்களெல்லாரும் பரிசுத்த ஆவியினாலே நிரப்பபட்டு, ஆவியானவர் தங்களுக்கு தந்தருளின வரத்தின்படியே வெவ்வேறு பாஷைகளிலே பேசத்தொடங்கினார்கள்.'' (அப்போஸ்தலர் 2:4)*

இயேசு கிறிஸ்து மாறுதவர், ஆகவே தொடர்ந்து பரிசுத்த ஆவியினால் அபிஷேகம் செய்கிறார் .

*''பரம பிதாவானவர் தம்மிடத்தில் வேண்டிக் கொள்ளுகிறவர்களுக்குப் பரிசுத்த ஆவியைக் கொடுப்பது அதிக நிச்சயம் அல்லவா?'' (லூக்கா 11:13)*

## பரிசுத்த ஆவியினால் நிரப்பபப்பட்ட வாழ்க்கை

*''பரிசுத்தஆவியினால் நிரப்பப்பட வேண்டுமென்று கட்டளை பெற்றிருக்கிறோம் . ஆவியினால் நிறைந்து ...'' (எபேசியர் 5:18)*

விசுவாசத்தோடு கேட்கும் போது விசுவாசத்தினால் பெற்றுக்கொள்கிறோம்.

*'' நாம் எதையாகிலும் அவருடைய சித்தத்தின்படி கேட்டால், அவர் நமக்குச் செவிகொடுக்கிறாரென்பதே அவரைப்பற்றி நாம் கொண்டிருக்கிற தைரியம்'' (யோவான் 5:14)*

நாம் ஆவியிலே நடக்க வேண்டும்.

*'' பின்னும் நான் சொல்லுகிறதென்னவென்றால், ஆவிக்கேற்றபடி நடந்து கொள்ளுங்கள்.'' (கலாத்தியர் 5:16)*

நாம் பரிசுத்த ஆவியினாலே வழிநடத்தப்பட வேண்டும்

*''மேலும் எவர்கள் தேவனுடைய ஆவியினாலே நடத்தப் படுகிறார்களோ, அவர்கள் தேவனுடைய புத்திரராயிருக்கிறார்கள்.'' (ரோமர் 8:14)*

**Printed By**
**Foursquare Missions Press © 2000**
**Guidelines for Christian Growth - TAMIL**